Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 26 புதன்கிழமை (11-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 15

# சிங்கள பௌத்த தீவிர அணியினர் அஷ்ரப்புக்கு எதிராகப் போர்க்கொடி!

## கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசம்பர் 11

அம்பாறை மாவட்டம் தீகவாபி புனித பிரதேசத்தில் உள்ள காணிகளை முஸ்லிம் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறப்படுவது தொடர்பாக, புனர்வாழ்வு, புனரமைப்பு, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்புக்கு எதிராக சிங்கள – பௌத்த தீவிரவாத அணியினர் திரண்டெழுந்திருக்கின்றார்கள்.

நேற்று கொழும்பு பௌத்த லோக மாவத்தையில் உள்ள அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் கட்டடத்துக்கு முன்பாக அவர்கள் பல நூற்றுக் கணக்கில் திரண்டு பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

தீகவாபி பௌத்த விகாரைக்குரிய காணிகளைச் சுவீகரித்து முஸ்லிம் விவசாயிகளுக்கு வழங்க அமைச்சர் அஷ்ரப் முயற்சிப்பதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சுமத்தினர்.

அஷ்ரப்புக்கு எதிரான சுலோகங்களை அவர்கள் எழுப்பினர்; அஷ்ரப்பைக் கண்டிக்கும் பதாகைகளை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை - திருமலையில் பரீட்சை இடையூறின்றி நடைபெறுமா?

### நேற்றுவரை உறுதியான தகவல் எதுவும் இல்லை

திருகோணமலை, டிச. 11

இன்று ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ. (சாதாரண தர) பரீட்சை திட்டமிட்டபடி கிழக்கு மாகாணத்தில் — குறிப்பாக அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் — நடைபெறுமா என்பது நேற்றுக் காலை வரை சந்தேகமாகவே இருந்தது.

இப்பரீட்சையின் போது மேற்பார்வையாளர்களாகப் பணிபுரிய வேண்டிய ஆசிரியர்கள் போர்க்கொடி தூக்கி இருப்பதே இதற்குக் காரணமாகும்.

கடந்த 18 மாதங்களாக வடக்கு - கிழக்கு ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கும் ஆபத்துக்காலக் கொடுப்பனவுப் படியை (அலவன்ஸை) வழங்காவிட்டால் இந்தப் பரீட்சைக்கான மேற்பார்வைப் பணியில் ஈடுபடப் போவதில்லை என ஆசிரியர் சங்கங்கள் பல தெரிவித்திருந்தது தெரிந்ததே.

எனினும் நான்கு மாத காலத்துக்குரிய ஆபத்து அலவன்ஸ் கொடுப்பனவை உடனடியாக வழங்குவதாகவும் —

மிகுதி விரைவில் பின்னர் வழங்கப்படும் என்றும் —

வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்திருந்தது.

ஆனால் இந்த அறிவிப்பை ஏற்றுக்கொள்வதான சமிக்ஞைகள் ஏதும் ஆசிரியர் சங்கங்களிடமிருந்து நேற்று முற்பகல் வரை கிடைக்கவில்லை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை நடைபெறாத இடங்களில் 3 மாதங்களில் விசேட பரீட்சை

### கல்வி அமைச்சர் நேற்று தெரிவிப்பு

கொழும்பு, டிச. 11

கிழக்கு மாகாணத்தில் உள்ள சில பரீட்சை நிலையங்களில் மேற்பார்வையாளர்களாகக் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ள ஆசிரியர்கள் ஆபத்து அலவன்ஸ் கோரி பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் இறங்கப்போவதாக அறிவித்துள்ளனர். எந்த ஒரு பகுதியிலாவது இப்படியான சம்பவத்தால் பரீட்சை தடைப்படுமானால் மூன்று மாதங்களில் அப்பகுதியில் விசேட பரீட்சை நடத்தப்படும்.

கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான நேற்று கொழும்பில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பாரிஸில் இலங்கைத் தூதரகம் முன் தமிழ்ப் பெண்கள் ஆர்ப்பாட்டம்!

மாங்குளம், டிச. 11

யாழ். குடாநாட்டில் அரச படைகளால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை ஆட்சேபித்து பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இலங்கைத் தூதரகத்துக்கு முன்னால் தமிழ்ப் பெண்கள் அமைப்பு கடந்த சனியன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியது.

பல நூற்றுக் கணக்கான பெண்கள், குழந்தைகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். பாரிஸைச் சேர்ந்த பெண்கள் அமைப்பு ஒன்றும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு பற்றியது.

கிருஷாந்தி பாலியல் வல்லுறவுச் சம்பவம் இந்த ஆர்ப்பாட்டத்தில் முக்கிய இடம் பெற்றது. ஸ்ரீலங்கா அரசுப் படைகளுக்கு எதிரான கோஷங்கள் அடங்கிய பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் எடுத்துச் சென்றனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் பாரிஸ் தமிழ்ப் பெண்கள் அமைப்பின் தலைவர் நிரஞ்சனா கேதீஸ்வரன், செயலாளர் புஷ்பலதா மதனலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய மகஜரும் உலகின் பல்வேறு மனித உரிமை அமைப்புகளுக்கு அனுப்ப [illegible]

### முச்சந்தி முரளி



அறளை பெயர்ந்திட்டுதோ .....இல்லாட்டி சுடலை ஞானமோ......!

## தேர்தல் ஒத்திவைப்பு பற்றி அறிவிப்பு

கொழும்பு, டிச. 11

யாழ்ப்பாணம், கிளிநொச்சி' மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள 27 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடத்துவது தொடர்பாக நியமனப் பத்திரங்கள் ஏற்பது காலவரையறை குறிப்பிடாது ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

இன்று முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நியமனப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதுவே இப்போது ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக நேற்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

நியமனப் பத்திரங்கள் ஏற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## இ. தொ. கா. இனிமேல் தனித்தே போட்டி!

### தொண்டா கூறுகின்றார்

திருகோணமலை, டிச. 11

''இனிவரும் தேர்தல்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்து – தனது சின்னத்தில் — மட்டுமே போட்டியிடும்; வேறு எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேர்ந்து ஒரு பட்டியலில் போட்டியிடாது.''

—இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் அக்கட்சியின் தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான்.

''இதுவரை காலமும் வேறு கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டு நாம் வெற்றியீட்டினாலும், அந்த வெற்றியினால் நாம் அடைந்த பயனைவிட மற்றவர்கள் அடைந்த பயனே அதிகம்.''

—இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ-150)

## கொசுக்கடி! எலித்தொல்லை!! சிறையில் ஜெயலலிதா படும்பாடு

வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கியதில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பல கோடி ரூபா சம்பந்தப்பட்ட ஊழல் வழக்குத் தொடர்பாக சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இரவில் தம்மால் நித்திரை கொள்ள முடியாது இருப்பதாகவும் —

கொசுக்கடி அதிகமாக இருப்பதாகவும் —

எலிகள் தொல்லை கொடுப்பதாகவும் — தெரிவித்துள்ளார்.

அ. தி. மு. கவின் முன்னாள் அமைச்சரும் மூத்த தலைவர்களில் ஒருவருமான நெடுஞ்செழியன் சிறையில் ஜெயலலிதாவைச் சந்தித்து வந்து மேற்கண்ட விவரங்களை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சிறையில் தமக்கு நல்ல உணவு தரப்படவில்லை என்றும் ஜெயலலிதா தெரிவித்துள்ளாராம். (இ 5)

## மழை தொடர்கிறது

மாங்குளம், டிச. 11

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் நேற்று தொடர்ந்து நான்காவது நாளாகப் பெய்து வரும் கடும் மழையால் வெள்ள நிலைமை மோசமான கட்டத்தை அடைந்திருப்பதாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

கிளிநொச்சியில் நேற்றுப் பகல் வானம் வெளித்திருந்தது. ஆனால் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்று தொடர்ந்து மழை பெய்தது.

வெள்ளம் காரணமாக பல நூற்றுக்கணக்கானோர் தமது வீடு, வாசல்களை இழந்து அந்தரிப்பதாகத் தெரியவந்தது.

(உ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
1997ஆம் ஆண்டுக்கான
# கேள்வி அறிவித்தல்

## சந்தைகள், இறைச்சிக் கடைகள் குத்தகை கேள்விப் படிவம்

மேற்படி கேள்வியின் பொருட்டு 21-11-96 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கமைய சுன்னாகம் உப அலுவலகத்தின் கேள்விகள் **18-12-96** வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

**(உடுவில் கிளிச்சந்தை தவிர)**

1. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் இறுதித்திகதி **1996 - 12 - 18** ஆந் திகதி **12. 00** மணி வரை.
2. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: **1996 - 12 - 19** ஆந் திகதி **12. 00** மணி வரை.
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி: **1996 - 12 - 20** ஆந் திகதி மு. ப. **10-00** மணி.

**ஆ. மகாலிங்கம்,**
**விசேட ஆணையாளர்.**

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
10-12-96. ((சி-3706)


# இதய காணிக்கை

பண்டிதர்
## சதாசிவம் பொன்னுத்துரை

(முன்னாள் வட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர், முன்னாள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்டத் தலைவர்)

தமிழ் ஆசிரியர்களின் விடிவுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த பண்டிதர் சதாசிவம் பொன்னுத்துரை அவர்களின் மறைவுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது ஆழ்ந்த கவலையைக் காணிக்கை ஆக்குகின்றது.

**த. மகாசிவம்,**
**பொதுச் செயலாளர்,**
**இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.**

தலைமைப் பணிமனை:
442, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (44053)

# கண்ணீர்ப் பூக்கள்



மலர்வு: 1937 — 07 — 16

உதிர்வு: 1996 — 12 — 04

## பொன். நாகமணி அவர்கள்

ஸ்தாபகர், வளர்மதி சனசமூக நிலையம்

மட்டுவில் தந்த மாமனிதன்
சமூகம் விரும்பிய சாதனையாளர்
பண்பை, அன்பை, இலக்கியந்தன்னை
விருப்புடன் வளர்த்த விற்பன்னர்.
சிறியோர், பெரியோர் பேதமின்றி
யாவரும் மகிழப் பேசிடும் அன்பர்.
வளம் பல செழிக்க வளர்மதி தன்னை
வாஞ்சையுடனே வளர்த்திட்டு நின்றார்
ஒளியை இழந்து இருளில் இருந்த
மாந்தர் தம்மை இதம் பெறக் கூவி
இந்நிலம் செழித்திட ஈங்கிதை வளர்ப்பீர்
என்றே வாழ்த்தும் கூறியே நின்றார்.
கல்விக் கனியை அருந்திட இடமும்
அமைத்துத் தந்திட்ட நன்மதியாளர்
பொன் நாகமணி என்பார்.
நானிலம் புகழ வாழ்ந்தவர் - இன்று
நீரினை இல்லமாய் அமைத்திடத் தேடி
விண்ணகம் சென்றதை எண்ணி எண்ணி
விம்மிக் கண்ணீர் வடிக்கின்றோம்

அன்னார் மறைவையொட்டி அவர் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வளர்மதி சனசமூக நிலையம்,**
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

05 - 12 - 96 (9052)

## ஓமந்தையை நோக்கி ஷெல்

மாங்குளம், டிச. 11

தாண்டிக்குளம் இராணுவ நிலையில் இருந்து நேற்றுக் காலை 5 மணி முதல் 5-30 மணி வரை ஓமந்தைக் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. (உ)

## நேற்று ஒரு கப்பலே வந்தது

யாழ்ப்பாணம், டிச. 11

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு நேற்று ஒரு கப்பல் மட்டுமே வந்தது. அதனால் ஒரு தொகுதி பயணிகளே நேற்று பயணமானார்கள்.

கப்பலில் பயணம் செய்ய ஏராளமானவர்கள் சென். ஜோன்ஸ் கல்லூரியில் நேற்றுக் காலை கூடிய போதும், காலநிலை சீர் இல்லாததால் ஒரு கப்பலே காங்கேசன் துறைக்கு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.

அதே சமயம் காங்கேசன் துறையில் இருந்து இன்றும் திருகோணமலைக்குப் பயணிகள் கப்பல் சேவை இடம் பெறவிருப்பதாக யாழ். சிவில் அலுவலகம் அறிவித்துள்ளது.

யாழ். சிவில் அலுவலகத்தில் பெயர்களைப் பதிவுசெய்தவர்களில் பட்டியல் இல. 140 க்கு உட்பட்டவர்களை இன்று காலை 7.00 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு வருமாறு யாழ். சிவில் அலுவலகம் கேட்டுள்ளது. (இ-3)

## தேசிய தராதரப் பத்திர பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், டிச. 11

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் 1997 ஆம் கல்வி ஆண்டுக்கான தேசிய தராதரப்பத்திர பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும்31 ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பங்களை யாழ். தொழில் நுட்பக்கல்லூரி அதிபருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பம் சம்பந்தமான மேலதிக விவரங்கள் அடங்கிய 4 - 10 - 96 வர்த்தமானி அறிவித்தலை யாழ். பிறவுண் வீதியிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் பார்வையிடலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# ஓராண்டு நிறைவினிலே....



தோற்றம்: 16 — 3 — 1926

மறைவு: 23 — 11 — 1995

## திருமதி சபாரத்தினம் சிவபாக்கியம்

திதி:- **11—12—96**

கண்ணிடை கருணை வைத்தீர்; சில
கதையிடை 'கடியை' வைத்தீர்
கையிடை கொடையை வைத்தீர்; உம்
சொல்லிடை செயலை வைத்தீர்!
அம்மா! விண்ணிடையேன் காலை வைத்தீர்?
எம்மிடையேன் கண்ணீர் வைத்தீர்?
இசையிடை நயத்தைப் போல; நீர்
இறையிடை சேரத் துதிப்போம்!

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;
**குடும்பத்தினர்.**

61/2, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (44058)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 04 — 1926

மறைவு: 09 — 12 — 1995

## அமரர் வல்லி அப்பையா

**திதி: 11 - 12 - 1996**

ஆறாத துயர அலையிடையே - இந்த
ஈராறு திங்களும் நகர்ந்ததுவோ!
மீளாத துயிலிடையே ஆழ்த்திவிட்ட - இப்
பேரான புயலொன்று வீசியதேன்?

எம் அன்புக்குரியவரின் முதல் ஆண்டு நினைவு நாள் கிரியையைத் தொடர்ந்து அன்னாரின் ஆன்ம சாந்திக்காக ஏற்பாடாகும் மதிய போசனத்தில் பங்கு கொண்டும், ஆன்ம ஈடேற்றத்திற்காக பிரார்த்திக்குமாறும் அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**குடும்பத்தவர்கள்.**

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (44045)

உ

# திருமண அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் தாது வருடம் கார்த்திகைத் திங்கள் 28 ஆம் நாள் (**13-12-1996**) வெள்ளிக்கிழமை காலை மணி 9-15 க்கும் 10-30 க்கும் இடையில் வரும் உத்தராட நட்சத்திரத்தோடு கூடிய சுபமுகூர்த்த வேளையில்

காலஞ்சென்ற நாதஸ்வர வித்வான்
**திரு. பொ. காளமேகம் அவர்களின்**
பேர்த்தியும்
**திரு. மாணிக்கம் சீதாலட்சுமி தம்பதியரின்**
சிரேஷ்ட புதல்வியுமான
**திருநிறை செல்வி**
**வனிதா**
அவர்களுக்கும்

பிரபல தவில் வித்வான்
**திரு. செ. சுப்பிரமணியம் - சரஸ்வதி**
தம்பதியரின்
கனிஷ்ட புதல்வன்
**திருநிறை செல்வன்**
**தில்லைராசா**
அவர்களுக்கும்

வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய கல்யாண மண்டபத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

**திரு. சி. மாணிக்கமும் பாரியாரும்**
626/3, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

**திரு. செ. சுப்பிரமணியமும் பாரியாரும்**
வட்டு. கிழக்கு,
சித்தன்கேணி.

வரவேற்பாளர்கள்: **திரு. சி. செல்வரத்தினம் (செல்வம்)**
(சைக்கிள் கடை)
**திரு. சு. தாசன்**
(இரு வீட்டார் அழைப்பு) (44061)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] நூலகம்.

# ஈராக் மீதான எண்ணெய் ஏற்றுமதி கட்டுப்பாட்டை ஐ. நா. தளர்த்தியது

பாக்தாத், டிச. 11

ஈராக் தனது நாட்டில் உற்பத்தியாகும் எண்ணெயை ஏற்றுமதி செய்வதற்கு விதித்திருந்த கட்டுப்பாட்டை ஐ. நா. மீண்டும் தளர்த்தி உள்ளது.

ஈராக் மக்களுக்குத் தேவையான மருந்து வகைகளையும், உணவுப் பொருள்களையும் வாங்குவதற்காக எண்ணெயை விற்க ஈராக்குக்கு ஐ. நா. அனுமதி வழங்கி உள்ளது.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் இந்த அனுமதி கிடைத்துள்ளது.

1990 ஆம் ஆண்டு குவைத்துக்கு எதிராக ஈராக் தாக்குதலை மேற்கொண்டதால் வளைகுடாப் போர் மூண்டது. இதையடுத்து ஈராக்கின் எண்ணெய் விற்பனை மீது தடைவிதிக்கப்பட்டது.

ஈராக்கின் எண்ணெய் ஏற்றுமதிக்குத் தேவையான அனுமதியை முறையாக ஐ. நா. பாதுகாப்புச் சபையிடமிருந்து பெற ஐ. நா. பொதுச்செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி நடவடிக்கை எடுத்து வருகிறார் (இ-10)

## கருணைக் கொலை உரிமை சட்டம் ஆஸியில் வாபஸாகும்

### இதுவரை ஒருவருக்கே பயன்பட்டது

கான்பரா, டிச. 11

ஆஸ்திரேலியாவில் சென்ற ஜூலை மாதம் இயற்றப்பெற்ற கருணைக் கொலை உரிமைச் சட்டத்தை வாபஸ் பெறவேண்டும் என நாடாளுமன்றக் கீழ் சபையில் கொண்டுவரப்பட்ட தனிநபர் மசோதா ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த மசோதா மேல் சபையாலும் அங்கீகரிக்கப்பட்டால் கருணைக் கொலை ஆஸ்திரேலியாவில் நிறுத்தப்படும்.

இதுவரை இச்சட்டத்தைப் பயன்படுத்தி தீராத புற்று நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் மருத்துவர்களின் உதவியுடன் தனது உயிரை மாய்த்துக் கொண்டிருந்தார். (இ-10)

## பழங்குடி மக்களுக்கு கனடாவில் தனி வங்கி

கனடாவிலுள்ள பழங்குடி மக்களாலே முற்றிலும் நிர்வகிக்கப்படும் வங்கி ஒன்று அடுத்தமாதம் திறக்கப்படவுள்ளது. என பழங்குடி மக்கள் சமூகத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த வங்கிக்கு சுமார் 30 கோடி ரூபாவை கனடா அரசு ஆரம்ப முதலீடாக வழங்கியுள்ளது.

வங்கியின் ஆரம்ப நிகழ்வுகளில் கனடாவின் பிரதமர் ஜோன் கிறேஷியன் நேற்று முன்தினம் கலந்து கொண்டார். (இ-10)

## ஒலிம்பிக் குண்டு வெடிப்பு தகவலுக்கு ரூ. 2 கோடி

கடந்த ஜூலை மாதம் அமெரிக்காவில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் போது இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு காரணமானவர் சுளை அடையாளம் காட்டுவோருக்கு சுமார் 2 கோடி ரூபா சன்மானம் வழங்கவுள்ளதாக அமெரிக்க புலனாய்வுத்துறை அறிவித்துள்ளது.

சம்பவம் நடைபெற்று 5 மாதங்களின் பின்னரும் அமெரிக்க உளவுத்துறை குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் இருந்து வருகிறது. (இ–10)

## பெத்லஹேம் செல்வதற்கு தடை நீக்கம்

கடந்த இரண்டரை மாதங்களாக பலஸ்தீனியர்களின் கட்டுப்பாட்டிலிருக்கும் பெத்லஹேமுக்கு இஸ்ரேல் மக்கள் நுழைவதைத் தடுப்பதற்காகப் போட்டிருந்த தடை கடந்த வெள்ளியன்று விலக்கப்பட்டது.

இஸ்ரேல் இராணுவமும் பலஸ்தீனக் காவல் துறையும் கடந்த வியாழன் முதல் கூட்டு ரோந்துப் பணியை ஆரம்பித்ததையடுத்து இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது.

இயேசுநாதர் பிறந்த பெத்லஹேமுக்கு எதிர்வரும் கிறிஸ்மஸ் தினத்தன்று மக்கள் தடையின்றிச் சென்று தரிசனம் செய்ய இதனால் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## மீண்டும் கன்னியர்மடம் செல்ல அன்னை திரேஸா விரும்புகிறார்

கல்கத்தா, டிச. 11

சுகவீனமுற்று கல்கத்தா ''வூட்லாண்ட்ஸ்'' மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அன்னை திரேஸா மீண்டும் கன்னியர் மடம் செல்ல விரும்புகிறார்.

கன்னியர்மடம் செல்ல தம்மை அனுமதிக்குமாறு தமக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆனால் அன்னையின் உடல் நிலை முற்றாகத் தேறவில்லை என்பதால் அவர் தொடர்ந்தும் மருத்துவமனையிலேயே இருக்க வேண்டும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-10)

## இந்தியாவில் எயிட்ஸ் வேகமாக பரவுகிறது

### மும்பாய் மோசமாகப் பாதிப்பு

புதுடில்லி, டிச. 11

அடுத்த இரண்டு மூன்று ஆண்டுகளில் எயிட்ஸ் நோய் இந்தியாவில் கட்டுக்கடங்காமல் பரவும் என மருத்துவ நிபுணர்களும் தொண்டர் நிறுவனங்களும் தெரிவித்துள்ளன.

இந்தியாவில் தற்பொழுது சுமார் 5 லட்சம் எயிட்ஸ் நோயாளர்கள் உள்ளனர் எனவும் குறைந்த பட்சமாக இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் அது 2 கோடியாகவோ அதிக பட்சமாக 5 கோடியாகவோ அதிகரிக்கும் அபாயம் உள்ளது எனவும் இந்திய சுகாதார நிறுவனத்தின் பொதுச்செயலாளர் ஐ. எச். ஹிலாரா தெரிவித்தார்.

இந்தியாவில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களில் அதிகமானோர் மும்பாயில் இருக்கின்றனர். மும்பாயில் சுமார் 70 ஆயிரம் விலைமாதர்கள் வாழும் ''சிவப்பு விளக்கு'' பகுதியிலிருந்து எயிட்ஸ் அதிகமாகப் பரவுகிறது. (இ-10)

### உலக அரங்கில்

## இந்திய அரசியல் சாசன பொன்விழா

புதுடில்லி, டிச. 11

இந்திய அரசியல் சாசன பொன்விழாவை ஒட்டி இந்திய நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த விழாவில் இந்திய குடியரசுத் தலைவர், துணைத் தலைவர், பிரதமர், மக்களவைத் தலைவர் ஆகியோர் உரையாற்றினர்.

முதலாவது அரசியல் சாசன நிர்ணய சபைக் கூட்டத்தில் பங்கேற்றிருந்த இந்திய முன்னாள் அமைச்சர் சி. சுப்பிரமணியம் உட்பட 15 பேருக்கு குடியரசுத் தலைவர் விருதுகளை வழங்கினார்.

1946 டிசம்பர் 9 ஆம் திகதி இந்திய அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் நடைபெற்றது. (இ-10)

# தி. மு. க. - தமிழ் மாநில காங்கிரஸ் உறவு இன்னும் எத்தனை நாளுக்கு?

## உறவு முறிந்தால் அ. தி. மு. கவுக்கே சாதகமாக முடியலாம்

**"தி. மு. க. - தமிழ் மாநில காங்கிரஸ் உறவு இன்னும் எத்தனை நாளுக்கு?" என்னும் தலைப்பில் இந்தியா ருடே நவ. 21- டிச. 25 சஞ்சிகையில் ஜி. சி. சேகர் எழுதிய அரசியல் கட்டுரை இங்கு மறுபிரசுரஞ் செய்யப்படுகிறது.**

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி. கே. மூப்பனாருக்குப் பெரிய தலைவலி ஒன்று காத்திருக்கிறது.

தி.மு. கவுடனான உறவை முறித்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை கட்சிக்குள் பூதாகாரமாக உருவெடுத்து வருகிறது.

தான் ஒரு மோசமான கூட்டாளி என்பதை உள்ளாட்சித் தேர்தலின் போது தி. மு. க. காட்டிவிட்டது என்ற எண்ணம் தமிழ் மாநில காங்கிரஸ் தொண்டர்கள், மாவட்ட நிர்வாகிகள், எம். எல். ஏக்கள் ஆகியோர் மத்தியில் வேகமாக வளர்ந்து வருகிறது.

தேர்தலின் போது தமிழ் மாநில காங்கிரஸ் வேட்பாளர்கள் எதிரணி வேட்பாளர்களை மட்டுமல்லாமல் தி. மு. கவின் போட்டி வேட்பாளர்களையும் சமாளிக்க வேண்டியிருந்தது.

இந்தப் போட்டி வேட்பாளர்களுக்கு தி. மு. கவின் மாவட்ட அளவிலான தலைவர்களின் ஆதரவும் இருந்தது.

பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கான தேர்தல் நடந்த போது பல இடங்களில் தமிழ் மாநில காங்கிரஸ் கவுன்சிலர்கள் வாயடைத்துப் போனார்கள். அதில் தமிழ் மாநில காங்கிரஸ் கலந்து கொள்ளக் கூடாது என்பதற்காக கட்சியின் கவுன்சிலர்கள் கடத்திச் செல்லப்பட்ட சம்பவமும் சில இடங்களில் நடந்தது.

''தி. மு. க. எங்கள் முதுகில் குத்தி விட்டதால் குறைந்தது 20 சதவீத இடங்களை இழந்து விட்டோம். எங்களுக்குள் ஏற்பட்ட இந்த சண்டையில் வெற்றி பெறவே முடியாத சில இடங்களில் அ. தி. மு. க. சுலபமாக வென்று விட்டது'' என்று தமிழ் மாநில காங்கிரஸின் மூத்த நிர்வாகி ஒருவர் கூறினார்.

அரசியல் களத்தில் மாற்றம் எவ்வளவு வேகமாக வரும் என்பதற்கு இந்த உரசல் ஓர் உதாரணம்.

இருபுறமும் குற்றச்சாட்டுக்கணைகள் பரிமாறிக் கொள்ள ஆரம்பித்து விட்டன. தி மு. க. சட்டாம்பிள்ளைத்தனமாக நடந்து கொள்கிறது என்று தமிழ் மாநில காங்கிரஸ் குற்றஞ்சாட்டுகிறது. முறையான அமைப்பு இல்லாத, வேகமாக அழிந்து வரும் கட்சி என்று தமிழ் மாநில காங்கிரஸை தி. மு. க. விமர்சிக்கிறது.

தமிழ் மாநில காங்கிரஸுக்கு முறையான அமைப்பும் அடித்தள வலுவும் இல்லை என்பது என்னமோ உண்மைதான். அதனாலேயே தேர்தலின் போது அமைப்பு ரீதியான உதவிக்கு அது தி. மு. கவையே அதிகம் சார்ந்திருந்தது.

தி. மு. க. திடீரென்று தேர்தல் தேதியை அறிவித்ததும் தமிழ் மாநில காங்கிரஸால் தன்னை தேர்தலுக்குள் வலுப்படுத்த முடியாமல் போனதற்கு ஒரு காரணம். தமிழ் மாநில காங்கிரஸில் கட்சி அமைப்புக்கான தேர்தல்கள் நடந்து கொண்டிருந்த சமயத்தில் அக்கட்சியைக் கலந்தாலோசிக்காமலேயே தி. மு. க. அரசு தேர்தல் தேதியை அறிவித்து விட்டது.

திருச்சி மாநாட்டில் தனது பலத்தைக் காட்டிய தமிழ் மாநில காங்கிரஸ், திராவிடக்கட்சிகளுக்கு மாற்றாக உருவெடுக்கும் விருப்பத்தையும் தெளிவாக வெளிப்படுத்திய பிறகு அக்கட்சியின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட தி. மு. க. [illegible] சட்டமன்றத் தேர்தலின் போது தான் பெற்ற உணர்ச்சிகரமான ஆதரவை அடிமட்டம் வரையிலும் எடுத்துச் செல்ல தமிழ் மாநில காங்கிரஸ் விரும்பியது. உள்ளாட்சித் தேர்தலில் சிறப்பாக வெற்றி பெறுவதன் மூலம் இதை சாதிக்கலாம் என்பது அதன் திட்டம். இப்படியே விட்டால் தமிழ் மாநில காங்கிரஸ் எக்கச்சக்கமாக வளர்ந்துவிடும் என்பதைப் புரிந்து கொண்ட தி. மு. க. தனது அரசியல் திறமைகளையெல்லாம்— தொகுதிப் பங்கீட்டில் கறாராக இருப்பது; களத்தில் ஒத்துழைக்க மறுப்பது போன்றவை — காட்டி தமிழ் மாநில காங்கிரஸுக்குப் பெரிய வெற்றி கிடைக்காமல் பார்த்துக்கொண்டது.

### பொது எதிரி இருந்ததால் இணைவு

''சட்டமன்றத் தேர்தலின் போது ஜெயலலிதா என்ற பொது எதிரி இருந்ததால் இரு கட்சிகளும் இணைந்து போரிட்டன. இப்போது அவர்களை ஒன்றிணைக்க அப்படிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. இரு கட்சிகளுக்குமே அடிமட்டத்தில் அதிகாரத்தைக் கைப்பற்ற ஆசை. எனவே கூட்டணி ஏற்பாட்டையும் மீறி அவை பரஸ்பரம் எதிரிகளாகவே செயல்பட்டன'' என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் இந்த சூழ்நிலையின் பின்னணியை விளக்கினார்.

கூட்டணியில் ஏற்பட்டுள்ள உரசலுக்கு வேறொரு பரிமாணமும் உண்டு. தி. மு. க. பல ஆண்டுகளாகப் பதவியில் இல்லாத நிலையிலும் தொண்டர்கள் விசுவாசத்துடன் கட்சிக்காக உழைத்து வந்தார்கள். மேலும், கடந்த 5 ஆண்டுகளாக ஜெயலலிதாவின் ஆட்சியில் ஏற்பட்ட அசௌகரியங்கள், வை. கோபாலசாமி ஏற்படுத்திய பிளவு ஆகியவற்றையெல்லாம் சமாளித்து கட்சிக்காகத் தீவிரமாக வேலை செய்து வருகிறார்கள்.

எனவே அவர்களைத் திருப்திப்படுத்தியாக வேண்டிய அவசியம் தி. மு. கவுக்கு இருந்தது. இந் நிலையில் தமிழ் மாநில காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு பரிவுடன் உதவி செய்வதை விட தனது தொண்டர்களின் ஆசைகளை நிறைவேற்றுவதே

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு
## நீங்கா நினைவலைகள்



அன்னை மடியில்: 06 — 04 — 1906

ஆண்டவன் அடியில்; 23 — 11 — 1995

திருமதி
### மங்கையர்க்கரசி வேலுப்பிள்ளை
**திதி:- 11 - 12 - 1996**

அளவற்ற அன்பு வைத்து, பலர் போற்றும்
பண்பைப் பெற்று, குறை வற்ற பாசம்
வைத்துச் செழிப்புடன் வாழ வைத்த
அன்புத் தெய்வமே! இன்று நிழலற்றுக்
கண்ணீருடன் வாழ்கின்றோம் அம்மா!

உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,**
**உற்றார், உறவினர்கள்.**

''செல்வஸ்தான்''
சித்தன்கேணி. (9046)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி
12 - 12 - 96



தோற்றம்: 04 — 04 — 1914

மறைவு: 12 — 11 — 1996

### அமரர் சவரிமுத்து ஆசீர்வாதம்
அவர்கள்

திருநாடலங்கரித்த திங்கள் நினைவு
**மறப்போமோ, நாம்?**

தந்தைமகற் காற்றுமுதவி அவயத்தின் கண்
தலையிடத்து வைத்தலெனும் தகைமை காண
மைந்தரெமை வளர்த்துயர வைத்த தாதாய்!
வையகத்து வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்வே!
சிந்தை மகிழ் வெய்திடவே உடன் பிறந்தோர்
சேவைதனில் தோள் கொடுத்த செங்கை யாளா
சொந்த பந்தச் சுற்றத்தார் நலங்கள் பேணச்
சோர்விலா துழைத்த தவம் மறப்போமோ நாம்?

★ ★ ★

ஆசிரியப் பணியினிலே பாலர் வாழ்வில்
அன்னையெனப் பரிந்தணைத்த அன்பரென்பார்
வீசுபுகழ் விவசாய விற்பன்னத் தோன்
விந்தை பெறும் ஓவியங்கள் தந்த செல்வன்
மாசறியாக் குழந்தையுளம் மலர்ந்த நண்பர்
மன்னுயிரைத் தன்னுயிராய் மதித்தாரென்பர்
பாசமொடு நினைந்துருகி வருந்த மேலோன்
பாதமலர் சென்றணைந்தீர் அமைதி காண்போம்.

எனது தந்தையாரின் இறுதிச் சடங்குகளின் போது நேரில் சமுகம் தந்து தேற்றுதல் வழங்கியோருக்கும், மலர் வளையங்கள் சார்த்தி அஞ்சலி செலுத்தியோருக்கும், பல்வேறு வழிகளிலும் உள்ளன்போடு உதவிபுரிந்த ஒவ்வொருவருக்கும், அன்னாரின் ஏனைய மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் யாவர் சார்பாகவும் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்வதோடு,

நாளை (12-12-1996) வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு, யாழ். புனித அடைக்கல அன்னையின் (O.L.R) தேவாலயத்தில், அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இடம் பெறும் திருப்பலியில் பங்கு கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறேன்.

**மரியதாஸ்**
(மகன்)

இல: 161, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (44037)

# வவுனியா அகதி முகாமில் இதுவரை 13 பேர் மரணம்

வவுனியா, டிச. 11

வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து வவுனியாவில் அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் அகதி முகாம்களில் தங்கியிருப்போரில் இதுவரை நான்கு கைக்குழந்தைகள் உட்பட 13 பேர் மரணமாகியுள்ளனர்.

ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி தாண்டிக்குளம் ஊடாக வடக்கில் இருந்து பொது மக்கள் செல்ல அனுமதி அளிக்கப்பட்டது.

இதனை அடுத்து கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் தங்கியிருந்த மக்களில் ஒரு தொகையினர் வவுனியா சென்றனர்.

அங்கு அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட அகதி முகாம்களில் அவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இதுவரை நோய் காரணமாக இறந்தோர் விவரம் வருமாறு:-

★ முத்தையா தம்பித்துரை (60 வயது) — வேப்பங்குளம் முகாம்.

★ மூக்கையா சுசித்தா (10 வயது)

★ பன்னீர்ச்செல்வன் (42 வயது) — நெலுக்குளம் முகாம்.

★ சின்னுராகவன் (62 வயது) — கல்வியியல் கல்லூரி நிலையம்.

★ சுப்பையா (67 வயது) — பரக்கும்பர ம. வித்தியாலய முகாம்.

★ ஜெசிந்தன் (2 வயது) — குட்செட் முகாம்.

★ அருச்சுனன் சுந்தரலிங்கம் (58 வயது) —ஈரப்பெரியகுளம் பாடசாலை முகாம்.

★ மயில்வாகனம் கந்தசாமி (55 வயது) — வேப்பங்குளம் முகாம்.

★ துரைசாமி (49 வயது) — நெலுக்குளம் முகாம்.

★ சோமசுந்தரம் அன்னப்பிள்ளை (77 வயது)— பூந்தோட்டம் பாடசாலை.

★ ரீ. ஜெறோனிக்கா (3 வயது) — கல்வியியல் கல்லூரி.

★ நித்தியானந்தன் கௌசியா (பத்துமாதம்) குட்செட் நிலையம்.

★ நவரத்தினம் துஷயந்தன் — (இரண்டு மாதம்) — சீ. சீ. ரி. எம். எஸ். பாடசாலை. (இ-3)

## கூட்டுறவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 11

கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர் பிரிவு 1995 ஆம் ஆண்டுக்கான இடைக்காலப் பரீட்சையும், இறுதிப் பரீட்சையும், இம் மாதம் இறுதி வாரத்தில் நடைபெறவுள்ளன.

இக்காலத்தில் பயிற்சி பெற்ற மாணவர்கள் விவரங்களை யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம் என கல்லூரி அதிபரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 1996 ஆம் ஆண்டு கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர் பிரிவு மாணவர்களுக்கான இடைக்காலப் பரீட்சையும் இம்மாத இறுதி வாரத்தில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பரீட்சைகள் யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியிலேயே நடைபெறும். (இ-15)

## பிரதேச செயலகத்துக்கு இடவசதி இல்லை

வலிமேற்கு, டிச. 11

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு காரியாலயம் பிரதேச செயலர் பணிமனையாக தரம் உயர்த்தப்பட்டதை அடுத்து இந்த அலுவலகம் செயல்படுவதற்குரிய இடவசதி போதாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக மேலும் ஒரு கட்டடத்தைபுனரமைப்பு செய்வது சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. (இ-145)

## நெடுந்தீவில் உருளைக் கிழங்கு உற்பத்தி

நெடுந்தீவு, டிச.11

நெடுந்தீவில் உருளைக் கிழங்கு உற்பத்திக்கென ஐந்து விவசாயிகளுக்கு இலவசமாக விதை உருளைக் கிழங்கு வழங்க யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார். (இ-111)

## காங்கேசனில் பொருள்களுடன் கப்பல்

யாழ்ப்பாணம், டிச. 11

அத்தியாவசியப் பொருள்களுடன் காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்துள்ள ''டொனாக்குள்ளி'' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன.

இக்கப்பலில் பொருள்கள் ஏற்றிய வர்த்தகர்களை உடன் செயலக புனர்வாழ்வுப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிலைய முன்னாள் காப்பாளரும்,
ஆயுட்கால உறுப்பினருமான
உயர்திரு
### முருகுப்பிள்ளை சோமசுந்தரம்
(Advocate)

அவர்கள் கொழும்பில் இறைபதம் அடைந்ததை அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சதாவதானி கதிரைவேற்பிள்ளை**
**சனசமூக நிலையத்தினர்.**

தம்பசிட்டி,
பருத்தித்துறை. (44048)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பகுதி
உத்தியோகத்தர்
திருமதி
### புவனேஸ்வரி அம்பலவாணர்

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சுகாதார வைத்திய அதிகாரியும்,**
**பணியாளர்களும்.**

சுகாதாரப் பகுதி ஊழியர்
நலன்புரிச் சங்கம்,
யாழ். மாநகர சபை,
யாழ்ப்பாணம். (44052)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 1949 — 10 — 02

மறைவு: 1994 — 12 — 03

### திருமதி கமலாதேவி பத்மநாதன்
**திதி: பூர்வபக்கப்பிரதமை (11-12-1996)**

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
அணைந்த அன்புத் தெய்வமே!
எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**கணவர், பிள்ளைகள்,**
**சகோதரர், உறவினர்.**

150/12, நெடுங்குளம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (44032)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா அகதி முகாம்களிலே சிகிச்சை அளிக்க அனுமதி மறுப்பு!

## கொழும்பிலிருந்து வந்த குழு ஏமாற்றத்துடன் திரும்பியது

கொழும்பு, டிச. 11

வவுனியா அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்குச் சிகிச்சை அளிக்க கொழும்பில் இருந்து வந்த வைத்திய நிபுணர் குழுவுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து வைத்திய நிபுணர்கள் அடங்கிய 12 பேர் கொண்ட குழு ஒன்று அகதி முகாம்களில் உள்ள அகதிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் நோக்குடன் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தனா தலைமையில் கடந்த சனிக்கிழமை வவுனியாவுக்கு வந்தது.

ஏற்கனவே வவுனியாவுக்கு வந்திருந்த சமயம் ஜயலத் ஜெயவர்த்தனா அகதி முகாம்களுக்குச் சென்றிருந்தார்.

அங்கு நிலவும் சீர்கேடுகள் குறித்து கொழும்பு திரும்பிய பின்னர் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் பேச்சு நடத்தி வைத்திய சிகிச்சை முகாம் ஒன்றை அங்கு நடத்த முடிவு செய்யப்பட்டது.

இந்த முடிவுப்படியே வைத்திய நிபுணர்கள் கொண்ட குழு கடந்த சனிக்கிழமை வவுனியா வந்தது.

அகதி முகாம்களில் வைத்திய சிகிச்சை முகாம் நடத்தும் பொறுப்பை வகித்த செஞ்சிலுவைச் சங்க வவுனியாக்கிளை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்ட வவுனியா பொலீஸ் அத்தியட்சகர், பொலீஸ் தலைமையகத்தில் இருந்து கிடைத்த உத்தரவுக்கு இணங்க, சிகிச்சை முகாம் நடத்த முடியாது எனத் தெரிவித்தார்.

அகதி முகாம்களில் உள்ள மக்களுக்கு வழங்கவென எடுத்து வரப்பட்ட 7 இலட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளை வவுனியா அரசினர் வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கிய பின்னர் வைத்திய குழு கொழும்பு திரும்பியது.

பத்திரிகையாளர்களும், வெள்ளவத்தையில் உள்ள நலன் விரும்பிகள் சிலரும் இக்குழுவினருடன் வவுனியா வந்திருந்தனர். (மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்)

## புலமைப்பரிசில் உதவித்தொகை அதிகரிக்கும்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் உதவித்தொகை அடுத்த ஆண்டு தொடக்கம் அதிகரிக்கப்படும்,

அடுத்த ஆண்டு தொடக்கம் ஜி. சீ. ஈ. சாதாரணதர. உயர்தர பரீட்சைகளின் பெறுபேறுகளை பத்திரிகைகளில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்—

இந்த நடவடிக்கை மாணவர்களின் கல்வியில் ஆசிரியர்கள் கூடுதல் அக்கறை காண்பிப்பதற்கு வழிகோலும் என்றும்— கல்வி அமைச்சர் ரிச்சேட்பத்திரான கொழும்பு விசாக வித்தியாலய பரிசளிப்பு விழாவில் தெரிவித்தார். (இ-4)

## சென்னையில் புலிகளின் ஆதரவு பிரமுகர் கைது!

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு புகழ்மாலை சூட்டியும் உரையாற்றியதற்காக தனித்தமிழர் இயக்கச் செயலாளர் சுப. வீரபாண்டியனை கடந்த வியாழக்கிழமை தமிழகப் பொலீஸார் கைது செய்தனர்.

இவர் சென்னை நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டு எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இதே காரணத்துக்காக பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த மணியரசன் என்பவரை பொலீஸார் தேடி வருவதாகவும் கூறப்பட்டது.

பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய மாநாட்டில் சுப. வீரபாண்டியனும், மணியரசனும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பிரிவினைக் கருத்துக்களைத் தெரிவித்ததாகத் தெரிவிக்கும் பொலீஸார் இருவர் மீதும் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ்மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து பரிசீலிக்கப்படுவதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (உ-3-150)

## புலிகளுக்கு உதவியதாக ஐவர் கைது!

சென்னை, டிச. 11

தமிழ்நாடு கும்பகோணத்தில் விடுதலைப் புலிகளுக்கு பெற்றோல் கடத்த முயன்றதற்காக 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் ஒருவர் பாட்டாளி மக்கள் கட்சி கும்பகோணம் அணியைச் சேர்ந்தவர். மற்றவர்களும் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் சுமார் 2 ஆயிரம் லீற்றர் பெற்றோலை கடத்த முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (இ-4)

## பிரேமாவின் ஆடம்பர பொருள்கள் ரூ. 70 லட்சத்துக்கு ஏலத்தில்!

கொழும்பு, டிச. 11

மிகிந்தலை 'கம் உதாவ' கண்காட்சிப் பகுதியில் நிறுவப்பட்டு வந்த ஜனாதிபதி பங்களாவுக்கு என முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஏற்பாட்டில் இலங்கை முதலீட்டுச் சபை 60 இலட்சம் ரூபா பெறுமதிக்கு இறக்குமதி செய்த பல்வேறு ஆடம்பரத் தளபாடப் பொருள்கள் கடந்த ஞாயிறன்றுசுமார் 70 இலட்சம் ரூபாவிற்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டன.

24 கரட் தங்கத்தினால் முலாம் பூசப்பட்ட அலங்காரக் கட்டில் ஒன்று 4 இலட்சத்து ஐயாயிரம் ரூபாவிற்கு விற்கப்பட்டது.

ஆடம்பர வரவேற்பறைத் தளபாடங்கள், மேசைகள், கதிரைகள், குளிரூட்டிகள், பாரிய கட்டில்கள், அலுமாரிகள், நிலைக் கண்ணாடிகள். தங்க முலாம் பூசப்பட்ட சுவர் அலங்காரப் பொருள்கள் என்பன ஏலம் விடப்பட்டன.

கோட்டை லயன்ஸ் கழக நிலையத்தில் இடம்பெற்ற இந்த ஏலவிற்பனையின் போது, மூன்றரை மணித்தியாலங்களுக்குள் பொருள்கள் அனைத்தும் விற்கப்பட்டு விட்டதாக ஏலவிற்பனையாளர்கள் தெரிவித்தனர். (உ-5)

## அனலைதீவுக்கு ஜெனரேற்றர் வந்தும் மின்சாரம் இல்லை!

அனலைதீவு கிராமத்துக்கு மின்சாரம் வழங்கவெனக் கொண்டு வரப்பட்ட ஜெனரேற்றர் கடந்த ஒரு வருடமாக சனசமூக நிலையக் கட்டடமொன்றில் வைக்கப்பட்டுள்ளது.

ஜெனரேற்றர் வந்து சேர்ந்த போதிலும் மின்சாரம் வழங்குவதற்கான மின்கம்ப வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## தென்மராட்சி விவசாயிகளுக்கு அமோனியா

தென்மராட்சி டிச. 11

தென்மராட்சிபிரதேச விவசாயிகளுக்கு வழங்கவென மேலும் ஆயிரம் பைக்கெற் அமோனியா சாவகச்சேரி கமநலசேவை நிலையத்திற்கு வந்துள்ளது.

ஏற்கனவே இந் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்ட அமோனியா 43கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள நெற் செய்கையாளர்களுக்கு தலா ஒரு பைக்கற் வீதம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-117)

## வேலணைக்கு மின்சாரம்

தென்மராட்சி, டிச. 11

வேலணை பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட வங்களாவடி சந்தியிலிருந்து அல்லைப்பிட்டி வரை விரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இப்பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு மின் கம்பங்கள் நடப்பட்டு மின்கம்பிகள் பொருத்தும் பணிகள் இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை வங்களாவடிச் சந்தியிலிருந்து அராலிச் சந்திவரை மின்கம்பங்களில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. (இ-117)

## பளைப்பகுதி ஓய்வூதிய வவுச்சர்கள்

தென்மராட்சி, டிச. 11

யாழ். மாவட்ட செயலக ஓய்வூதியக் கிளையில் ஓய்வூதியம் பெற்ற பளைப் பகுதியில் நிரந்தரமாக வசிக்கும் ஓய்வூதியர்களின் ஓய்வூதிய வவுச்சர்கள் இம்மாதம் முதல் தென்மராட்சி பிரதேச செயலக ஓய்வூதியப் பிரிவினரால் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெற்றவர்களின் வவுச்சர்கள் அந்தந்த கிராமிய வங்கிகளுக்கும் —

ஏனைய வங்கிகளில் ஓய்வூதியம் பெற்றவர்களின் வவுச்சர்கள் அவர்களின் முகவரிக்கும் — சேர்க்கப்படுமென பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (இ-117)

## வடமராட்சியில் வயல்கள் வெள்ளத்தில்

வடமராட்சி, டிச. 11

வடமராட்சிப் பகுதியில் கடந்த மூன்று தினங்களாக பெய்து வரும் அடை மழையால் நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தாழ்ந்த பகுதிகளில் [illegible] வல்லைக்கடல் நீரேரி நிரம்பியுள்ளது. (இ-173)

## தி மு. க. - தமிழ்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தி. மு. கவுக்கு முக்கியமாகப்பட்டது.

அத்தோடு, மு. க. ஸ்டாலின் சுலபமாகக் கட்சியின் வருங்காலத் தலைவராக உருவெடுப்பதற்கு வசதியாக, அவருடைய ஆதரவாளர்களுக்கு அதிக அளவு பதவி கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தமும் இருந்தது.

''கட்சியைக் காப்பாற்ற வேண்டுமானால் பழைய தலைவர்களையும், இளைஞர்களையும் திருப்திப்படுத்தியாக வேண்டிய கட்டாயம் கலைஞருக்கு. இந்த சூழ்நிலையில் தமிழ் மாநில காங்கிரஸுக்கு முக்கியத்துவம் கொடுக்க முடியாமல் போய் விட்டது'' என்று தி. மு. க. எம். எல். ஏ. ஒருவர் ஒப்புக் கொள்கிறார்.

### தலைவர்கள் மத்தியிலே உறவு

தமிழ் மாநில காங்கிரஸின் கை தாழ்ந்ததற்கு வேறொரு காரணமும் உண்டு.

தி. மு. கவின் மாவட்டச் செயலாளர்கள் பலம் வாய்ந்தவர்கள். அவர்களில் பலர் அமைச்சர்களாகவும் இருக்கிறார்கள். தமிழ் மாநில காங்கிரஸ் பலவீனமான மாவட்டச் செயலாளர்களை தி. மு. க. செயலர்களால் தங்கள் இஷ்டத்திற்கு ஆட்டி வைக்க முடியும்.

தி. மு. க. செய்த ''துரோகத்தால்'' தொண்டர்கள் மத்தியில் உரசல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ''எங்கள் தொண்டர்கள் இனிமேல் தி. மு. கவை நம்பமாட்டார்கள் தலைவர்கள் மட்டத்தில் கூட்டணி சுமுகமாக இருந்தாலும் தொண்டர்கள் மத்தியில் அது எடுபடாது'' என்று வெளிப்படையாக ஒப்புக்கொண்டார் இளம் தமிழ் மாநில காங்கிரஸ் எம். பி. ஒருவர்.

அவர் சொன்னது சரிதான். மூப்பனாருக்கும் கருணாநிதிக்கும் இடையே இருக்கும் சுமுகமான உறவுதான் இந்தப் பிளவை இணைக்கக் கூடிய ஒரே அம்சம். சொல்லப் போனால் கருணாநிதி இந்த உறவை தவறாகக் கூடப் பயன்படுத்தியிருக்கிறார். தி. மு. க வினர் மேயராகவோ அல்லது மாநகர தலைவராகவோ இருக்கும் இடத்தில் துணை மேயர், துணைத் தலைவர் தி. மு. கவைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள் என்று கருணாநிதி அறிவித்தார்.

இந்த விஷயம் பேசித் தீர்க்கப்படும் என்று அதே நேரத்தில் மூப்பனார் அறிக்கை விடுத்தார். ''மூப்பனால சாதுவாக இருப்பதைப் பயன் படுத்திக் கொண்டு கருணாநிதி தன்னிச்சயாக அறிவிப்புகளை வெளியிடுகிறார். அதை எங்கள் தலைவரும் எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்கிறா'' என்று தமிழ் மாநில காங்கிரஸ் எம். எல், ஏ. ஒருவர் வருத்தப்படுறார்.

சட்ட மன்றத் தேர்தலின் போது தமிழ் மாநில காங்கிரஸ் பெற்ற நற்பெயரை வாக்கு வங்கியாகமாற்றி, ஆதரவு திரட்ட முடியாமல் இருப்பதும் மூப்பனாரின் இன்னொரு பலவீனம்.

கட்சியில் சேர வந்த எல்லாரையும் அவர்களது தராதரம் பார்க்காமல் மூப்பனார் சேர்த்துக் கொண்டதால் உறுப்பினர்களைச் சேர்க்கும் முயற்சிவெறும் ஆரவாரமான விழாவாக நின்று விட்டது.

''சென்னை ஓட்டோ டிரைவர்களுக்கு தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் அட்டை பொலீசிடமிருந்து தப்பித்துக் கொள்ள வசதியாக இருக்கிறது, இதற்காகத்தான் அவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். கட்சியின் மீதுள்ள பிடிப்பினால் அல்ல'' என்று கட்சியின் மூத்த நிர்வாகி ஒருவர் குறிப்பிட்டார்.

மேலும் அவ்வளவாக ஆதரவு இல்லாத நபர்களை மாவட்ட செயலாளர்களாக நியமித்ததன்மூலம் மூப்பனார் ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு கோஷ்டிகளை உருவாக்க வழி ஏற்படுத்தி விட்டார். உள்ளூர் எம். பி. தலைமையில் ஒரு கோஷ்டியும் மாவட்ட செயலாளர் தலைமையில் இன்னொன்றுமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்றன.

மூப்பனார் விரைவில் கட்சியை சீர்படுத்தியாக வேண்டும் இல்லாவிட்டால் அ. தி. மு. க. ஆட்சிக் காலத்தில் காங்கிரஸ் இருந்தது போல ''எக்ஸ்ரா லக்கேஜ்'' ஆக மாறவேண்டியிருக்கும். 1997இல் எப்போது வேண்டுமானாலும் நாடாளுமன்றத்துக்குத் தேர்தல் வரலாம் என்பது தான் மூப்பனாரை நிதானிக்கவைக்கிறது. தேர்தல் வந்தால் தி.மு.க.—தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணியால் மீண்டும் அ.தி.முகவை ஓரங்கட்ட முடியும். தவிர அ.தி.மு.க. இன்னும் வீழ்ந்து விடவில்லை. உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க வுக்கு 25சதவீத வாக்குகள் கிடைத்தன.

இந்த நிலையில் தி. மு. க வுடனான கூட்டணியில் பிளவு ஏற்பட்டால் அது ஜெயலலிதாவுக்கு சாதகமாக முடியலாம் என்பதால் கூட்டணியைக் காப்பாற்றியாக வேண்டிய அவசியம் மூப்பனாருக்கு இருக்கிறது.

போட்டி அ.தி.மு.க வுடன் கூட்டணி வைத்துக் கொள்ளலாம் என்றால், அவர்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளக் கூடிய சக்தியாக இன்னமும் உருவெடுக்கவில்லை.

இரண்டு தேர்தல்களில் கணிசமான வெற்றி பெற்று, கோட்டையைப் பிடிப்போம் என்று முழங்கிய ஒரு கட்சி, இவ்வளவு சீக்கிரம் இப்படித் தடுமாறிக் கொண்டிருப்பது துரதிருஷ்டம்தான். 'தமிழ் மாநில காங்கிரஸ் தான் இனி என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு அதில் கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால் அதன் எழுச்சி ஒரு நீர்க்குமிழி போல ஆகிவிடலாம். ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


**விற்பனைக்குண்டு**

சுத்த இன பொமனேரியன் பெண் நாய்க்குட்டி 50 நாள்கள் நிறைவடைந்தது. பூச்சி நீக்கப்பட்டது. தொடர்பு:- து. வைத்தீஸ்வரன், மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு முன். (44040)

**தபால் மூலம் கணிதம்**

கணிதத்தில் பின் தங்கியோருக்காக மேற்படி பயிற்சி நெறி தபால் மூலம் ஆரம்பமாகவுள்ளது. விவரங்களுக்கு, கடிதம் மூலம் தொடர்பு கொள்க. திருமதி சி. குலசேகரம், சுழிபுரம் வடக்கு, சுழிபுரம். (9050)


## வவுனியா கல்வியியல் கல்லூரி

யாழ்ப்பாணம், டிச. 11

வவுனியா கல்வியியல் கல்லூரிக்கு விண்ணப்பித்து இதுவரை நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்காதவர்களுக்கு நாளையும், நாளை மறுதினமும் விசேட நேர்முகப் பரீட்சை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தங்கள் பெயர்களை யாழ். வலயம் I – கல்வித் திணைக்களத்தில் பதிந்து நேர்முகப் பரீட்சைத் திகதிகளை அறிந்து கொள்ளலாமென யாழ். வலயம் - I இன் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ-4)

## ராணுவத் தளபதி கோரிக்கை

கொழும்பு. டிச. 11

புதிதாகப் படைகளில் சேர்ந்தவர்களையும், தப்பி ஓடி மீண்டும் படையில் சேர்ந்தவர்களையும் அன்புடன் நடத்தும்படி பிராந்திய தளபதிகளை இராணுவத்தளபதி றோகான் தலுவத்த கேட்டுள்ளார்.

அவர்களின் நலன்களை சீராகக் கவனிக்கும் படியும் அவர் கோரியுள்ளார். (இ-3-150)

## மானிய அடிப்படையில் ஆடுகள்

வலி.தென்மேற்கு, டிச. 11

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழும் குடும்பத்தினருக்கு மானிய அடிப்படையில் ஆடு வழங்கப்பட உள்ளது.

இதற்கென தீவகத்திலிருந்து ஆடுகளை கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-145)


**O/L 97, Ye. 10**

மாணவர்களுக்கான

**விஞ்ஞானம்**

★ திரு. T. சுதாகர் ★

**வினைல்ஸ்**
சுன்னாகம்
**ஈசன்**
கோண்டாவில்
**சுப்றா**
சித்தன்கேணி
**சித்திவிநாயகர்**
மல்லாகம்
**இராகலன்**
உரும்பிராய்

**ஆரம்பம்:**

**14 - 12 - 1996**

(தனியான அனுமதிகள் வழங்கப்படும்)

(44038)



## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

காலம்: **1996 - 12 - 21 ஆம் திகதி சனிக்கிழமை**
காலை 10-00 மணி (புதிய நேரம்)

இடம்: **யா/மல்லாகம் மகாவித்தியாலய மண்டபம்**

தலைமை: **திரு. சி. சிவமகாராசா** அவர்கள்
(சங்கத் தலைவர்)

### முதன்மை விருந்தினர்

**திரு. நா. வேதநாயகன்** அவர்கள்
(வலி. வடக்கு பிரதேச செயலர்/ பிரதிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்)

**கலாநிதி க. குணராசா** அவர்கள்
(யாழ். பிரதேசச் செயலர்/ மேலதிக அரச அதிபர்/ பிரதிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், யாழ்ப்பாண பிரதேசம்)

### சிறப்பு விருந்தினர்

**திரு. க. ஆனந்தராசா** அவர்கள்
(முகாமையாளர், மக்கள் வங்கி, சுன்னாகம்)

**திருமதி கோ. திருநாவுக்கரசு** அவர்கள்
(மாவட்ட கூ. அ. உத்தியோகத்தர் - கணக்காய்வு)

### நிகழ்ச்சி நிரல்

1. மௌன இறை வணக்கம்.
2. செயலாளரினால் கூட்ட அறிவித்தல் வாசித்தல்.
3. மறைந்த சங்க முன்னாள் நெறியாளர்கள், கிளைக்குழு உறுப்பினர்கள், மற்றும் அங்கத்தவர்கள், சங்கப்பணியாளர்கள் ஆகியோருக்காக மௌன அஞ்சலி.
4. தலைமையுரை.
5. சங்க செயற்பாட்டு அறிக்கை சமர்ப்பித்தல்.
6. நெறியாளர் குழு வெற்றிடம் நிரப்பப்பட்டமை. ''சங்க நெறியாளராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. இ. ஸ்ரீதாமோதரராசா அவர்கள் இராஜினாமாச் செய்தமையால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, சங்க கிளை. 14 இன் பொதுச்சபைப் பிரதிநிதி திரு. சி. சிவமகாராசா அவர்களை சங்க நெறியாளர் குழு உறுப்பினராக ஒத்துத் தேர்ந்தெடுத்தமையைச் சங்கப் பொதுச்சபையின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படுகிறது.''
7. 1997 ஆம் ஆண்டுக்குரிய சங்கத்தின் உத்தேச மொத்தக் கடன் எல்லையைத் தீர்மானித்தல்.
8. 1997 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரித்தல்.
9. கூட்டுறவு ஆணையாளரின் சுற்றுநிருபங்கள் சமர்ப்பித்தல்.
   - 9. 1. சங்க நெறியாளர்களின் பிரயாணப்படி தொடர்பான சுற்றுநிருபம் இல. 02/90 திகதி 1990-05-29
   - 9. 2. சங்கத் தலைவர்களுக்கான படிகள் தொடர்பான, 1992-09-08 ஆம் திகதிய சுற்றுநிருபம்.
   - 9. 3. நெறியாளர்கள்/ கிளைக்குழுக்களின் தலைவர்கள், அங்கத்தவர்களுக்கு வாழ்க்கைப் படி/ பிரயாணப்படி வழங்கல் தொடர்பான சுற்றுநிருபம் இல. 95/1, திகதி 1995-03-23.
10. சங்கப் பொதுச்சபையின் அனுமதி பெறப்பட வேண்டிய சங்கச் செலவீனங்களை அங்கீகரித்தல்.
11. 1991 ஆம் ஆண்டு தொடக்கம் 1996 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான கணக்காய்வு நிலுவைகள் பற்றி ஆராய்தல்.
12. சங்க இழப்புகளை மதிப்பீடு செய்தல் பற்றி ஆராய்தல்.
13. சங்க உபவிதிகளை ஏற்றுக்கொள்ளல். ''1992 ஆம் ஆண்டில் 11 ஆவது இலக்கக் கூட்டுறவுச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக வலி. வடக்குப் பிரதேச செயலர்/ பிரதிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அவர்களினால் முன் அங்கீகாரம் வழங்கப்பெற்ற உபவிதி ஏற்றுக் கொள்ளல்.''
14. பிரேரணைகள்.
15. முதன்மை விருந்தினர் உரை.
16. சிறப்பு விருந்தினர் உரை.
17. நன்றியுரை.
18. மௌன இறை வணக்கம்.
19. மதிய போசனம்.

**முக்கிய குறிப்பு:**

1. பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கு நிகழ்ச்சி நிரலும், இணைப்புக்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நிகழ்ச்சி நிரலும் இணைப்புக்களும் கிடைக்கப் பெறாதவர்கள் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.
2. இவ் வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கான முன் அறிவித்தல் ஏற்கனவே **28-11-1996** ஆம் திகதி உதயன் பத்திரிகை விளம்பரம் மூலமும், பொதுச்சபை உறுப்பினர்களுக்கு நேரடியாகவும் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததையும் ஞாபகப்படுத்திக் கொள்ளுகின்றோம்.
3. நிகழ்ச்சி நிரல் இலக்கம் — **05, 07, 08, 10, 12, 13, 14** ஆகிய நிகழ்ச்சிகளுக்கான மேலதிக விவரங்கள் பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கு கூட்ட அறிவித்தலுடன் சேர்த்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விவரங்களுக்கு நேரடியாகச் சங்கச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொதுச் சபைப் பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது இக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சி. சிவமகாராசா,** தலைவர். **சி. முருகையா,** செயலாளர்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்,
மல்லாகம், 1996-12-06. (சி-3703)



## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 13 — 09 — 1909

இறப்பு: 12 — 11 — 1996

### அமரர் க. சி. சிவப்பிரகாசம்

(இளைப்பாறிய தொழிற்திணைக்கள லிகிதர்)

ஆறு முருகனுக்கு அருகில்
ஆறு அருமை மைந்தர்களையும்
தவப்புதல்வியையும் பெற்று
பேரும் புகழுமாய் வாழ்வித்த அப்பாவே!
எம்மைப் பிரிந்து முப்பத்தொரு தினங்கள்
சென்றாலும் எங்கள் மனதில் உங்கள்
நினைவலைகள் விட்டகலாத
ஒளிவிளக்கே அப்பா.

எமது இல்லத்தில் 12-12-1996 வியாழக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

ஆலடி வீதி,
புலோலி தென்மேற்கு,
புலோலி. (44044)



## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 26 — 02 — 1933

உதிர்வு: 11 — 12 — 1995

செல்வி

### நித்தியலட்சுமி பொன்னம்பலம்

(இளைப்பாறிய பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியை, யா / வட்டு. இந்துக்கல்லூரி)

**திதி:- 30 - 11 - 1996**

குலவிளக்குச் சுடர்பரப்பக் குடி விளங்கும்
என்றிருந்தோம் வவாக்காவே!
மின்னல் போல் மறைந்தீர்! இடம்
பெயர்ந்த வேளையிலே
மிகத் துயர் அடைந்தோம் நாம்
ஒரு வருடம் கழிந்தும் ஆறாது -
எம் மனது வெந்தணல் போல் எரிகிறது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

**அன்புத் தங்கை, மைத்துனர், மகள்.**

தகவல்:-
திரு. திருமதி சிவபாலசுப்பிரமணியம்.
வட்டு - கிழக்கு,
வட்டுக்கோட்டை. (9054)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## மருந்துத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்று கிடைத்தற்கரிய பொருள்களில் முதலிடம் வகிப்பது மருந்து வகைகள். அவ்வாறு கிடைத்தாலும் மக்களின் பணப்பைகளை வெறிதாக்கும் அளவுக்கு விலைகள் மிக உயர்ந்து காணப்படுகின்றன.

இலவச மருத்துவம் செய்யும் அரசினர் ஆஸ்பத்திரிகளிலோ மருந்து வகைகளுக்கு அடிக்கடி மருந்துத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதற்குச் சரியான காரணத்தைச் சொல்ல முடியவில்லை. சிவில் நிர்வாகத்துக்குத் துணை புரியும் இராணுவ வட்டாரங்களோ இக்கரையில் உள்ள அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணம் என்று அடித்துச் சொல்கிறார்கள். ஆனால் எமது உள்ளூர் அதிகாரிகள், அக்கரையில் (கொழும்பு அதிகாரிகள் தரப்பில்) உள்ள அக்கறையின்மையும், சிவப்பு நாடாக் கெடுபிடிகளுமே காரணமென முணுமுணுக்கிறார்கள்.

அது ஒரு புறம் இருக்க, தனியார் மருந்துக் கடைகளிலும் முக்கிய மருந்துகள் கிடைப்பதில்லை. பல படிகள் ஏறி இறங்கினாலும் சில மருந்துகள் "இல்லை" என்றாகிவிட்டது. கிடைக்கும் சில மருந்து வகைகளுக்கும்விலைகளைக் கேட்டால் மூக்கால் அழவேண்டியுள்ளது. 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துக்கு முன்னர் விற்ற விலைகளிலேயே சில மருந்துகளை வாங்க வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்த காலத்தில், மருந்து வகைகளை இங்கு கொண்டு வருவதற்கு கூட்டுப் படைத் தலைமையகத்தின் (ஜே. ஓ. சி. யின்) அனுமதி பெற வேண்டியிருந்தது. இப்போதும், அதே பாணியில், கூட்டு நடவடிக்கைத் தலைமையகத்திடம் (ஜே, ஓ, எச் சிடம்) அனுமதி பெற வேண்டியுள்ளது. அதனாலே மருந்து வகைகளைத் தருவிப்பதில் பெரிதாக மாற்றம் எதுவும் நிகழவில்லை என்று மருந்துக்கடை உரிமையாளர் தரப்பில் காரணம் தெரிவிக்கப்படலாம்.

எப்படியோ, குடாநாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக, அரசாங்க மருந்துக் கூட்டுத்தாபனமான "ஒசுசல" வின் கிளை ஒன்றைத்திறக்க முடிவாகியிருக்கிறது.

குடாநாட்டின் மருந்துத் தட்டுப்பாடு குறித்து முன்னரும் (11 . 8 . 1996 இல்) இப்பத்தியில் எழுதப்பட்டதன் பின்னர் "ஒசுசல" கிளை இங்கு திறக்கப்படும் என்று உத்தியோகப் பற்றற்ற முறையில் தகவல்கள் வெளிவந்து கொண்டிருந்தன.

நான்கு மாதங்களின் பின்னர், 'ஒசுசல' கிளையைத் திறப்பது குறித்து கொழும்பிலுயர்மட்ட மாநாடொன்றில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

"ஒசுசல"வைத் திறந்து மருந்து விற்பனையில் ஏக போகம்செலுத்தும் எண்ணம் அரசுக்கு இருக்கக் கூடாது. கீரைக் கடைக்கும் எதிர்க் கடை வேண்டும். ஆனால் நியாய விலைகளில் நோயாளர்களுக்கு மருந்து வகைகளைக் கிடைக்கச் செய்வதே பிரதான நோக்கமாக இருக்க வேண்டும்.

மருந்து உயிர் காக்கும் பொருள். அதனைக் கொண்டு வந்து விற்பதற்குத் தனியாருக்கும் உதவ வேண்டும். அப்போது தான் அது தாராளமாகக் கிடைக்கும்.

# மட்டக்களப்பு சிறையில் 28 கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம்

திருகோணமலை, டிச. 11
மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 28 தமிழ்க் கைதிகள் நேற்று முன்தினம் சாகும் வரை உண்ணா விரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தனர்.

இவர்களை விடுதலை செய்யுமாறு மேல் நீதிமன்றம் உத்தரவிட்ட போதிலும், இவர்களுக்கு எதிராக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விடுத்திருக்கும் தடுப்புக் காவல் உத்தரவு இன்னமும் விலக்கிக் கொள்ளப்படாததால் இவர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதனை ஆட்சேபித்தே சாகும் வரையான உண்ணா விரதப் போராட்டத்தைஇவர்கள் ஆரம்பித்திருக்கின்றனர்.

தாம் விடுதலை செய்யப்படும் வரை போராட்டம் தொடரும் என்றும் இவர்கள் தெரிவித்தனர்.

உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளை ஈ. பி. டி. பியின் யாழ். மாவட்ட எம். பியான அ. இராசமாணிக்கம் நேற்று முன்தினம் நேரில் சென்று சந்தித்தார்.

இதற்கிடையில் —
இக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக சிறைச்சாலைகளின் ஆணையாளர் கே. டபிள்யூ. ஈ. காலியத்த பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டிருப்பதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-150)

### கிளிநொச்சித் தாக்குதல்:

## சிப்பாய்களின் இரு சடலங்கள் ஆயுதங்கள் புலிகளிடம் சிக்கின

திருகோணமலை, டிச. 11
கிளிநொச்சியில் கடந்த வெள்ளியன்று தாங்கள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட ஐந்து இராணுவத்தினரில் இரண்டு இராணுவத்தினரின் சடலங்களையும் இராணுவத் தளபாடங்களையும் தாங்கள் கைப்பற்றியுள்ளதாகவும் —

தமது தரப்பில் சேதங்கள் ஏதுமில்லை என்றும் —

விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றார்கள்.

இதேசமயம் — கிளிநொச்சியில் உள்ள இராணுவத் தளத்திலிருந்து மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஞாயிறன்று இரவு தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-150)

## பாரிஸில் புலிகள் பிரமுகர் அஞ்சலி கூட்டம்

பாரிஸில் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர், 'பாரிஸ் ஈழ முரசு' பத்திரிகையின் ஆசிரியர் ஆகியோரின் நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்று கடந்த ஞாயிறன்று பாரிஸில் உள்ள மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இக்கூட்டத்தில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கு பற்றியதாக அறிவிக்கப்பட்டது. (உ)

## ஓய்வூதிய வவுச்சர்கள்

வலி. கிழக்கு செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட ஓய்வூதியர்களுக்கான டிசம்பர் மாதத்திற்கான வவுச்சர்கள் இன்று தபாலில் சேர்க்கப்படும் என்றும் —

கிராமிய வங்கிகளுக்கான வவுச்சர்கள் கிராமிய வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் கோப்பாய் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

## மனித உரிமைகள் தின ஊர்வலம் மட்டக்களப்பில் அனுமதி மறுப்பு

மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் அனைத்துலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நேற்று ஏற்பாடு செய்திருந்த ஊர்வலத்திற்கு பாதுகாப்புப் படையினர் இறுதி நேரத்தில் அனுமதி மறுத்து விட்டதாகத் தெரியவருகின்றது.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் இருந்து இந்த ஊர்வலம் புறப்படுவதாக இருந்தது.

எனினும் மனித உரிமைகள் தினத்தை ஒட்டிய பொதுக் கூட்டம் திட்டமிடப்பட்டபடி தேவநாயகம் கூட்டுறவுக் கலையரங்க மண்டபத்தில் நேற்று நடைபெறுவதாக இருந்தது.

மண்டப வளவுக்குள் பொது மக்கள் ஆர்ப்பாட்டம் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (உ-150)

## சாவல்கட்டு பகுதியில் 400 மீனவர் பாதிப்பு

வலிதென்மேற்கு, டிச. 11
கடல் தொழில் இன்றி சாவல்கட்டு பகுதியில் சுமார் 400 மீனவர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இவர்கள் தாம் படுமோசமான பொருளாதார கஷ்டத்தில் இருப்பதாக யாழ். அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளனர்.

காக்கைதீவு கடல் நீரேரியில் மட்டும் தொழில் செய்து வந்த இந்த மீனவர்கள் சமீபகாலமாக மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாதநிலையில் உள்ளனர்.

## சமுகமளிக்க கோரிக்கை

தேசியகல்வி நிறுவக கல்வி டிப்புளோமா இரண்டாம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிய இந்துக்கல்லூரி நிலைய ஆசிரிய மாணவர்களை இம் மாதம் 14 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9-30மணிக்கு நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

### பிரிட்டிஷ் அதிகாரிகள்

## அகதிகள் நிலைமையை நேரில் கண்டறிந்தனர்

திருகோணமலை. டிச. 11
வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து வவுனியாவில் அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொது மக்களின் நிலைமைகளை பிரிட்டிஷ் அகதிகள் கவுன்ஸிலைச் சேர்ந்த இரு உயரதிகாரிகள் கடந்த சனியன்று வவுனியாவுக்குச் சென்று நேரில் அவதானித்தனர்.

மேற்படி அகதிகள் கவுன்ஸிலின் சர்வதேச விவகாரங்களுக்கான தலைமை அதிகாரி மெல்கம் ரோஜர்ஸ், நிறைவேற்று அலுவலர் நிக் ஹார்ட் விக் ஆகியோரே வவுனியாவுக்கு விஜயம் செய்து அங்குள்ள அகதி முகாம்களை நேரில் பார்வையிட்டனர்.

இராணுவக் கட்டுப்பாடு அற்ற வன்னிப் பகுதியில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை நிலைமைகள், இடம் பெயர்ந்துள்ள மக்களின் கதி ஆகியவை பற்றிய விவரங்களையும் அவர்கள் அங்கு கேட்டறிந்தனர்.

வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் மற்றும் உயரதிகாரிகளையும் அவர்கள் சந்தித்துப் பேசினார்கள். (உ-150)

### நீதியரசர் ஷிரானி விவகாரம்:

## அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொள்வதா?

### திங்களன்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு

திருகோணமலை, டிச. 11
கலாநிதி ஷிரானி பண்டாரநாயக்கா உயர் நீதிமன்றத்தின் புதிய நீதியரசராக நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து மூன்று சட்டத்தரணிகள் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தொடர்ந்து விசாரணைக்கு ஏற்றுக்கொள்வதா என்பது குறித்து உயர் நீதிமன்றம் வரும் திங்களன்று தீர்ப்பு வழங்கும்.

இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்ற பூர்வாங்க விவகாரம் குறித்து கடந்த திங்கள் வரை மூன்று நாள்கள் உயர் நீதிமன்றம் பரிசீலனை செய்த பின்னர் தீர்ப்பு வழங்குவதை அடுத்த திங்கள் வரை ஒத்திவைத்தது.

நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ, டாக்டர் ஏ. ஆர். பி. அமரசிங்க, பி. இராமநாதன், எஸ். டபிள்யூ. பி. வடுகொடபிட்டிய, பிரியந்த பெரேரா, ஏ. எஸ். விஜேதுங்க, எஸ். ஆனந்த குமாரசுவாமி ஆகியோர் முன்னிலையிலேயே இந்த மனுக்கள் பற்றிய பூர்வாங்க விவகாரம் விசாரணை செய்யப்பட்டது.

இந்த மனுக்கள் மீதான விசாரணைகளின் போது உயர் நீதிமன்றத்தில் பெரும் திரளான சட்டத்தரணிகள் கூடியிருந்தனர். (உ-150)

## வடக்கில் கைதான 74 பேர் இன்று அநுராதபுரம் நீதிமன்றில்

திருகோணமலை, டிச. 11
வடபகுதியில் படையினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது கைதாகி பின்னர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 74 தமிழர்கள் இன்று அநுராதபுரம் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட இருப்பதாக அறியவருகின்றது —

இவர்களில் மூவர் பெண்கள். இருவர் மணமானவர். மற்றொருவர் 14 வயது மாணவர்.

காரணம் கூறப்படாது கைது செய்யப்பட்ட இந்த 74 பேரும் மூன்று மாதகாலத்தின் பின்னர் கடந்த செப்டெம்பர் 12 ஆம் திகதியன்று அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் இன்று வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

கடந்த காலத்தில் படையினரிடம் சரணடைந்த 11 பேரும் இதில் அடங்குவர் என்றும் —

அவர்களில் ஒருவர் [illegible] சித்திரவதைகளுக்கு ஆளாகி இருப்பதாகத் தெரிகின்றது என்றும் —

செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

சரணடைந்தவர்கள் புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்றும் —

தடுத்து வைக்கப்பட்டோரில் பத்து முதல் 15 பேர் விடுதலை செய்யப்படுவர் என்றும் — தெரியவந்தது. (உ-150)

## நாளை

**கார்த்திகை 27**
**வியாழக்கிழமை**
**திதி:** துதியை
முன் இரவு 7.46 வரை.
**நட்சத்திரம்:** மூலம்
காலை 6.51 வரை.
பூராடம் வெள்ளிக்கிழமை
காலை 5.31 வரை.
ராகுகாலம் : 1.50 – 3.20
சுபநேரம் : 7.50 – 9.20
([illegible]
பழைய நேரப்படி)

### வடக்கு உள்ளூராட்சித் தேர்தல்

## குழு ஒன்றை அனுப்பி ஜனாதிபதி நிலைமையை நேரில் அறிந்தார்

''வடக்கில் தேர்தல் நடத்தும் சாத்தியம் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தமிழ்க் கட்சிகளிடம் கோரினேன். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. எனவே எமது குழு ஒன்றை அங்கு அனுப்பி அங்குள்ள நிலைமையை அறிந்தேன். அதன் பின்னரே தேர்தல் நடதத முடிவு செய்தேன்.''

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தமிழ்க்கட்சிகளிடம் தெரிவித்தார்.

கடந்த 2 ஆம் திகதி கொழும்பில் நடந்த விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட புளொட், ஈ.பி.டி.பி. எம். பிக்கள், உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தக் காரணம் என்ன? என்று ஜனாதிபதியிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதில் அளித்தார். (இ-3-150)

## டிரக் புரண்டு 59பேர் பலி!

பீஹாரில் நேற்று நிகழ்ந்த வீதி விபத்தில் குறைந்தது 59 பேர் இறந்தனர் என்றும் 33 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகளை ஏற்றிச்சென்ற டிரக் ஒன்று தலைகீழாகக் கவிழ்ந்து இவ்விபத்து நிகழ்ந்தது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்:
11 – 12 – 1931



ஆண்டவன் பிடியில்
13 – 12 – 1993

## திருமதி ச. மங்களேஸ்வரி

(முன்னாள் ஆசிரியர்)

**திதி: 11 - 12 - 96**

ஆண்டு மூன்று சென்றும் ஆறவில்லை;
மீண்டும் உம்மை நாம் காண்பது எப்போது?

என்றும் நினைவு கூரும்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், 'மங்களாஸ்' குடும்பத்தினர்.**

தகவல்: கிருபன் (மகன்)
மங்களா அழகுச் சோலை,
சாவகச்சேரி.

(44050)

# மரண அறிவித்தல்கள்

## மாரிமுத்து பாஸ்கரன்

[ சைக்கிள் கடை உரிமையாளர், டச்சு றோட், கல்வியங்காடு. ]

நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும், கல்வியங்காடு, இராசவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து பாஸ்கரன் 02-12-96 இல் விசுவமடுவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து மற்றும் பூமணி மாரிமுத்து தம்பதிகளின் மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், விஜயகுமார், ராஜ்குமார், வினோதினி ஆகியோரின் தந்தையும், சர்மிளாவின் மாமனாரும், தவமணி, பட்டு, கிளி, ஈசன், சிவா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05 - 12 - 96 வியாழக்கிழமை விசுவமடுவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
**பா. விஜயகுமார்.**
( மகன் )

17/19, பண்டாரக்குளம்
மேற்கு ஒழுங்கை,
நல்லூர் வடக்கு.

(44046)

## கனகசபை சிவகுரு (அம்பாள்)

அச்சுவேலி கதிரிப்பாயைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சிவகுரு (அம்பாள்) 8 - 12 - 96 இல் காலமானார்.

இவர் சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும், தவனேஸ்வரி (ஆசிரியை, நோர்வூட்), தவனேஸ்வரன் (கிராம உத்தியோகத்தர், வல்வெட்டித்துறை தென் கிழக்கு), தேவமனோகரி (ஆசிரியை, சென். தோமஸ் பாடசாலை, பருத்தித்துறை), தேவகுமாரி (ஆசிரியை, இந்துக் கல்லூரி திருகோணமலை), தவமோகன் (தபால் அலுவலகம், பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இராசநாயகம் (ஆசிரியர், நோர்வூட்), சுந்தரராஜன் (தனிப்பட்ட ஆங்கில ஆசிரியர்), ஆனந்தன் (மார்க்கண்டு பிறதர்ஸ், திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08 – 12 - 96 இல் அவரது இல்லத்தில் நடைபெற்றன என்பதை உறவினர், நண்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**சி. தவனேஸ்வரன்**
(மகன்)

3 ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

(44043)

## வைரவி கந்தையா

வேலணை மேற்கு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வைரவி கந்தையா 03-11-96 அன்று ஒட்டுசுட்டானில் சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், புனிதவதி, நாகேஸ்வரி, பவநாதன், சரஸ்வதி, சதாசிவம் (ஆசிரியர், வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), பங்கயற்செல்வன், காலஞ்சென்ற இரஞ்சிதகுமார் ஆகியோரது அன்புத் தந்தையும், சிவராசா, செல்லையா, சிவசோதி, முத்துலிங்கம், பானுமதி, சுசிலாதேவி ஆகியோரது அன்பு மாமனும், சின்னராசா, காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் சிவபாக்கியம் ஆகியோரது அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04 - 11 - 96 அன்று ஒட்டுசுட்டானில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
**க. சதாசிவம்**

சின்ன மணியகாரன் வீதி,
வட்டுக்கோட்டை.

(44054)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேட்) லிமிடெட்டினரால்யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## சிங்கள...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் அவர்கள் தாங்கி நின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மகா சங்கத்தைச் சேர்ந்தோரும் பங்குபற்றியதாக 'ரூபவாஹினி' தெரிவித்தது. பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களும் கூட இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர்.

இந்த ஆர்ப்பாட்டம் குறித்தும் தமக்கு எதிராக எழுந்துள்ள உணர்வலைகள் குறித்தும் அமைச்சர் அஷ்ரப் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்களும், சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையில் வகுப்புவாதத்தையும் பகையையும் கிளப்பிவிட முயற்சிப்பது இதன் மூலம் நிரூபணமாகியுள்ளது.

உண்மையில் நடந்தது என்னவென்றால் —

கடந்த ஆட்சிக் காலத்தில் தமது நெல் வயல்களை இழந்த அட்டாளைச்சேனையைச் சேர்ந்த — 150 விவசாயிகளுக்கு மாற்றுக் காணிகளை வழங்க முடிவு செய்யப்பட்டது.

அந்த முடிவை எடுத்தது நானல்லன்.

அந்த முடிவை எடுத்த பிரதேச செயலர், அரச அதிபர், காணி ஆணையாளர், உதவி அரச அதிபர், மாவட்ட காணி அதிகாரி ஆகிய அனைவரும் சிங்கள — பௌத்தர்களே.

அதற்கான மாற்றுக் காணியின் எல்லைகளைக் கண்டறிவதற்காக அந்தப் பகுதியில் உள்ள காணிப் பிரதேசத்தில் அதிபார புல்டோஸர் இயந்திரங்களை இயக்கிச் சென்ற வாகனச் சாரதி கூட ஒரு சிங்களவரே.

ஆகவே இந்த நிலைமையை சம்பந்தப்பட்டோர் உணர வேண்டும். — என்று தெரிவித்தார்.

தீகவாபி புனித பிரதேச பகுதியில் பாரிய இயந்திரங்களைக் கொண்டு காடுகளை அழித்து, காணிகளை முஸ்லிம்களுக்குப் பிரித்து வழங்க அமைச்சர் அஷ்ரப் நடவடிக்கை எடுத்து வருவதாக சிங்கள — பௌத்த தீவிரவாதிகள் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் சிங்கள — முஸ்லிம் மக்களிடையே பதற்றம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-5)

## தேர்தல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதற்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (உ-5)

# அம்பாறை - திருமலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

எனினும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மட்டும் பரீட்சை மேற்பார்வைப்பணியைப்புறக்கணிக்கும்போராட்டத்தில் இறங்கப் போவதில்லை என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

''வடக்கு – கிழக்கு மாணவர் கல்வி நலனைக் கவனத்தில் கொண்டு, பரீட்சையைப் பகிஷ்கரிக்கும் போராட்டத்தைக் கைவிட்டு பரீட்சை அமைதியாகவும் சுமுகமாகவும் நடைபெற சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்'' — என அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு, த. மகாசிவம் பகிரங்க அறிக்கை ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

எனினும் ஏனைய ஆசிரியர் சங்கங்கள் இந்தப் போராட்டத்தைக் கைவிடுவதான அறிவிப்பை நேற்று முற்பகல் வரை விடுக்கவில்லை. அவை தமது நிலையில்விடாப்பிடியாக இருந்தால் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் பரீட்சை பாதிப்புறலாம் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்புக்குச் சென்றிருந்த வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா நேற்று முற்பகல் வரை திருகோணமலைக்குத் திரும்பவில்லை. அதனால் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மேலதிக ஆக்கபூர்வமான முன் முயற்சிகள் நேற்றுக் காலை வரை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இதற்கிடையில், மூதூர், கிண்ணியா, கந்தளாய்ப் பகுதிகளுக்குத் தேவையான பரீட்சைக் காகிதாதிகள் நேற்று முன்தினம் ஜீப்கள் மூலம் அவ்வப்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

அதே சமயம் வடக்கில் ஜி. சீ. ஈ. பரீட்சை இன்று இடையூறு எதுவும் இன்றி சுமுகமாக நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-3-51-150)

## பரீட்சை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் நடந்த மாகாண கல்வி அமைச்சர்கள் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கில் ஜி.சீ.ஈ. பரீட்சை தடைப்படாது நடக்க சகலரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இக் கூட்டத்தில் அமைச்சர் கேட்டுக் கொண்டார். (இ)


# தேவை

யாழ்ப்பாணத்தில் தொழில் நிறுவனம் ஒன்றுக்கு
**கணக்காளரும், காசாளரும்**
தேவைப்படுகின்றனர்.

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

அனுபவம், கல்வி, நற்சான்றிதழ்களுடன் **16 - 12 - 96** க்கு முன் விண்ணப்பிக்கவும்.

**இல. 564,**
**மே | பா உதயன் பணிமனை,**
யாழ்ப்பாணம்.

(44057)

# NEW SCIENCE ACADEMY
NALLUR

## நல்லாசிகள்!

இன்று ஆரம்பமாகும்
**G. C. E. (O/L) - 1996,**
**பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவ மணிகளும்**

சிறந்த பெறுபேறுகள் பெற்றுக் கல்வியில் மேம்பாடடைய வேண்டுமென எமது கல்வி நிறுவனத்தின் நல்லாசிகளைத் தெரிவிக்கின்றோம்.

**- நிர்வாகி**
ஆசிரியர் குழு,
சிரேஷ்ட, கனிஷ்ட, மாணவர்கள்.

(44060)



உ

# புதுக்கடைத் திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் தாது வருடம் கார்த்திகை மாதம் 26ஆம் நாள் (11-12-1996) இன்று புதன்கிழமை பகல் 10-00 மணி முதல் 11-00 வரையுள்ள சுப முகூர்த்த நல் வேளையில்

# ராகம்ஸ்
## பட்டுச்சோலை

எனும் ஸ்தாபனத்தை
இல. 24, நவீன சந்தை (உட்புறம்) யாழ்.
கட்டடத்தில் ஆரம்பிக்க இருப்பதால்,

''மங்கையர் மனம் விரும்பும் மணியான புடவைகளும்
நங்கையர் நாடிவரும் நவநாகரிக டிசைன் சேலைகளும்
தங்கையர் தம்பியர்க்கு நல்ல தரமான துணிமணிகளும்
உங்களைக் கவர்ந்திடுமே இங்கு ஓடோடி வந்திடுவீர்!''

அனைவரும் வருக! ஆதரவு தருக!!



★ உங்கள் தேவையைப் பூர்த்தி செய்ய எங்கள் சேவை காத்திருக்கின்றது ★

'ராகம்ஸ் பட்டுச்சோலை' இல. 24, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (சி/3707)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org